தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

# ஆண்டறிக்கை

# 2015

NIOSH

National Institute of Occupational Safety and Health • Sri Lanka

# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**கௌரவ டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன**

அமைச்சர் - தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

**கௌரவ ரவீந்திர சமரவீர**

பிரதி அமைச்சர் - தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

**திரு. எஸ்.எம்.ஜி.ஜயரத்ன**

செயலாளர், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

**கலாநிதி.என்.சி.அமரசிங்க**

பணிப்பாளர் நாயகம், தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**கணக்காய்வுக் குழு**

- **கலாநிதி.என்.சி.அமரசிங்க** - பணிப்பாளர் நாயகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்
- **சி.சேனநாயக்க** – தலைவர், பிரதிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்
- **டபிள்யூ.டீ.பி.ஜே.வெலிவத்த** – அவதானிப்பாளர், கணக்காய்வு அத்தியேட்சகர், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்
- **ஈ. டபிள்யூ.ஏ.கே.புண்ணியசிறி** – உள்ளகக் கணக்காய்வாளர், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு
- **பி.எம்.கே.பெரேரா** – உதவிப் பணிப்பாளர், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**வங்கி**

மக்கள் வங்கி – நாரஹென்பிட்டி

**பொருளடக்கம்** **பக்கம்**

01. அறிமுகம் 04
02. தொலைநோக்கு மற்றும் செயற்பணி 05
03. கௌரவ அமைச்சரின் செய்தி 06
04. அமைச்சுச் செயலாளரின் செய்தி 07
05. நிறுவகப் பணிப்பாளர் அதிபதியின் செய்தி 08
06. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர்கள் சபை 09-11
07. நிறுவகத்தின் கட்டமைப்பு 12
08. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் 13
09. 2015 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கற்கைநெறிகள்,வேலைத்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் 14-15

**9.1 பயிற்சிகள்**

- தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி
- தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி
- சுகாதார பராமரிப்பு வேலையாளர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி

**9.2 நடப்பாண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகள்** 16

- இயந்திரங்களுக்குக் கரியிடும் தொழிலாளர்களுக்கான பயிற்சி
- கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள்

**10. தேசிய பாதுகாப்பு வாரச் செயற்பாடுகள்** 17-20

- வருடாந்தக் கண்காட்சி
- மஜேஸ்ரிக் சிற்ரியில் பணியாளர் விழிப்புணர்வு
- தொழில்சாரீதியில் அங்கவீனமுற்ற பணியாளர்களை சமூகமயப்படுத்தல்
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு 21
- பட்டமளிப்பு விழா 22
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் கணக்கெடுப்பும் ஆராய்ச்சியும் 23-25
- உற்பத்தித்திறன் விருதிற்கான தயார்ப்படுத்தல் 26-28

- **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கற்கைகள் நூலகம்** 29
- **நிதிப் பகுப்பாய்வு** 30

# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

## அறிமுகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் மூலம் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் ஒன்றிணைந்தவொரு அங்கமாக உருவாக்கப்பட்டது. எமது நிறுவனமானது, சரியான பாதுகாப்புக் கொள்கைகள், உத்திகளைப் பின்பற்றுவதன்மூலமும் சிறந்த சுகாதார, பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன்மூலம் தொழில்சார் விபத்துகள், நோய்களைத் தடுத்து ஒவ்வொருவருக்கு மான சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதில் எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு தொழில் வழங்குநர்களுக்கும் தொழிலாளர் களுக்கும் அவர்களது நன்மை கருதி இவ்வாறான பயிற்சிகளினூடாகத் தேவையான கல்வியையும் வழங்குகின்றது.

மேற்குறித்த செயற்பாடுகளை இன்னும் வெற்றிகரமான முறையில் ஆற்றுவதன் மூலம் நுகர்வோருக்கு அதி உச்ச மனநிறைவளிக்கும் ஆக்கபூர்வமான சேவையினை எம்மால் வழங்கக் கூடியதாகவுள்ளது என்பதனைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். நமது நிறுவனத்தினால் மிகவும் குறுகியவொரு காலத்திற்குள் நாம் மகிழ்வடையக்கூடிய வகையில் கணிசமானளவு வெற்றியீட்ட முடிந்திருக்கிறது என்ற உண்மை இத்தால் புலனாகிறது. பெருமளவான நிறுவனங்கள் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் சேவைகளைத் தொடர்ச்சியாகப் பெற்றுவந்திருக்கின்றன என்ற உண்மை பின்வரக்கூடிய ஆய்வின் மூலம் மேலும் நிரூபணமாகும்.

அவ்வாறாயினும், இந்த நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை ஏற்றுமதிச் செயன்முறை வலயத்தில் அமைந்துள்ள கைத்தொழிற்றுறையின் பெருமளவான ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்களுக்கும், பெருந்தோட்டத்துறைசார்ந்த நிறுவனங்களுக்கும் பெரும் பங்களிப்பினை வழங்கியிருக்கின்றது. அண்மைக் காலங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல்நலன் தொடர்பில் விழிப்புணர்வூட்டுவதற்குப் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் தொழிலாளர்கள் சார்ந்த நிறுவனங்களோடு இணைந்து மேற்கொண்டிருக்கிறோம்.

## தொலைநோக்கு.......................

“அனைவருக்கும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பலை வழங்குதல்

## செயற்பணி.........................

“உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்குடன் வேலைத்தலத்தில் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரத்தை உத்தரவாதப்படுத்துவதனை முன்னெடுத்து கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினூடாக முத்தரப்பு அக்கறைதாரர்களை வலுப்படுத்துதல் மற்றும் அனைத்து வகையான தொழில் தீங்குகளையும் தடுத்தல்”

## தொழில், தொழில் உறவுகள் அமைச்சரின் செய்தி



தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28 ஆம் திகதி தாபிக்கப்பட்ட நியதிச்சட்டக் கூட்டுத்தாபன அமைப்பொன்றாகும். ஆனால் நியதிச்சட்ட தத்துவங்கள், இலங்கை தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் வழங்கப் பட்டிருந்தன. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, விழிப்புணர்வினை அதிகரிப்பது மற்றும் உரிய சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றச் செய்வதனூடாக அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான வேலைச் சூழலை சீர்ப்படுத்தி, பேணி, நிரந்தரமானதாக்கு வதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றது. விழிப்புணர்வு பற்றிய பயிற்சியினை உருவாக்குதல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய ஆராய்ச்சி, நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்கள், ஆலோசனை மற்றும் உசாவலர் சேவைகளைப் பரப்புதல் எமது பணிப்பாணையாகும். நாம் பணியாளர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய அனைத்து வேலையாளர்களுக்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றி கற்பிக்கின்றோம்.

கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், ஆரோக்கியத்தையும், இலங்கையில் ஆரோக்கியமான தொழில் அணியொன்றையும் உருவாக்குவதிலான அர்ப்பணிப்பினைக் குறித்துக் காட்டுகின்றன. தொழில்சார் பாதுகாப்பு சூழலைக் கட்டியெழுப்புவதில் மேற்கொள்ளப்பட்டுள்ள அர்ப்பணிப்பினை நான் பாராட்டுகின்றேன்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தை முன்னெடுப்பதில் ஓய்வில்லாது பங்களிப்பு நல்கியிருந்த தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி உள்ளடங்கலாக அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ.டபிள்யு.டீ.ஜே.செனவிரத்ன**



**தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளர் மற்றும் தேசிய தொழி மற்றும் சுகாதார நிறுவகத்தின் தலைவர் அவர்களின் செய்தி**

தனது அபிவிருத்தியில் முன்னேற்றத்தைக் காட்டி, தொழிற்றுறைக்கு தனது சேவைக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2015 ஆம் ஆண்டறிக்கைக்கு இச்செய்தியை வழங்குவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் பாதுகாப்பான கலாசாரமொன்றை விருத்திசெய்வனை முன்னேடுப்பதில் பணியாற்றிய அனைத்துப் பணியாளர்களின் அர்ப்பணிப்பு பற்றிய தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் ஆண்டறிக்கையானது என்னை மிகவும் கவர்கின்றது. சர்வதேச தொழில் தாபனத்தினால் வெளியிடப்பட்ட உலக மதிப்பீட்டின்படி, வருடாந்தம் உலகளாவியரீதியில் 2.3 மில்லியன் இறப்புகள் தொழில் புரிகையில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அதிகளவான இறப்பு வீதம் ஏனையவை தொழில்சார் ஊறுகளின் காரணத்தினால் இருக்கையில், சுமார் 2 மில்லியன் இறப்புகள் தொழிலுடன் தொடர்புபட்ட நோய்களால் ஏற்பட்டுள்ளன.

ஊறு மற்றும் நோய்களுடன் தொடர்புபட்ட வேலை பொருளாதாரச் செலவு நாட்டில் உள்நாட்டுப் பொருளாதார உற்பத்தியில் 1.8 – 6% என்பதற்கிடையில் மாறுபட்டு சராசரியாக 4% என மதிப்பிடப்படு கின்றது. விபத்தொன்று அல்லது ஊறு ஏற்படுவதனை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகளுக்கு வேலை யாளர்களின் சொந்தப் பண்புகள், குடும்ப நிலைமை, வீட்டுச் சூழ்நிலை, வேலைக்கு வரும் போது இடம்பெறும் நிகழ்வுகள், உபகரணத்தின் வகைகள், பயன்படுத்தியுள்ள சாதனங்கள் போன்று பல காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. உதாரணமாக, களைப்பு, மன அழுத்தம் மற்றும் சத்தம், சுத்தமின்மை, வெளிச்சம் போதாமை, பாதுகாப்பான உபகரணம் இன்மை, உபகரணங்களைப் பயன்படுத்துகைளில் பயிற்சி போதாமை, கவனமின்மை, நேரம் போன்ற அத்தகைய வேலை நிலைமைகள் சரியின்மை அத்துடன் பிற வேறு காரணிகளும் விபத்தொன்றில் பங்கு வகிக்கின்றன. இதன்படி, நாம் அனைவரும் இந்த நிலைமைகளை மிகவும் தீவிரமாக நோக்க வேண்டும் என்பதுடன் தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைத் தடுப்பதில் ஈடுபடுதலும் வேண்டும்.

தொழில்சார் ஊறுகளைத் தடுப்பது என்பது தெழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அரசு ஆகிய முத்தரப்பினதும் இணைந்த பொறுப்பாகும்.

இந்த பாரிய நிகழ்வினை ஒழுங்குபடுத்துவதற்கான தலைமைத்துவத்தை அரச தாபனமாக எனது அமைச்சாகிய தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சின் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் எடுத்துள்ளது.

தொழில்சார் ஊறுகளைத் தடுப்பதில் புதிய உபாயங்களை செம்மைப்படுத்தி விருத்தி செய்வதற்கு பாரியளவு பங்களிப்புச் செய்துள்ள பதவியினருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், வார இறுதி நாட்களில் மாணவர்கள், ஆசிரியர்களை ஒருங்கிணைத்து கடுமையாக உழைத்திருந்த தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் ஏனைய பதவியினருக்கும் எனது நன்றிகள்.

நாட்டில் பாதுகாப்பான கலாசாரமொன்றை உருவாக்குவதில் கைகோப்போமாக.

**திரு.எஸ்.எம்.கோடாபய ஜயரத்ன**

**தேசிய தொழில்சார் பாதகாப்பு மற்றும் சுகாதார நிறுவகப் பணிப்பளர் அதிபதியின் செய்தி**



தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28 ஆம் திகதி தாபிக்கப்பட்ட நியதிச்சட்டக் கூட்டுத்தாபன அமைப்பொன்றாகும். ஆனால் நியதிச்சட்ட தத்துவங்கள், இலங்கை தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் வழங்கப் பட்டிருந்தன. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, விழிப்புணர்வினை அதிகரிப்பது மற்றும் உரிய சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றச் செய்வதனூடாக அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான வேலைச் சூழலை சீர்ப்படுத்தி, பேணி, நிரந்தரமானதாக்கு வதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றது. விழிப்புணர்வு பற்றிய பயிற்சியினை உருவாக்குதல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய ஆராய்ச்சி, நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்கள், ஆலோசனை மற்றும் உசாவலர் சேவைகளைப் பரப்புதல் எமது பணிப்பாணையாகும். நாம் பணியாளர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய அனைத்து வேலையாளர்களுக்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றி கற்பிக்கின்றோம்.

இந்நிறுவகத்தின் இலக்கு, சுய நிதியிடல் அமைப்பொன்றாக இருக்கையில் தொழிற்றுறைக்கு உலக தரத்திலான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையொன்றினை வழங்குவதாகும். தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார தாபனம் எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் தொழில்சார் பாதகாப்பு மற்றும் சுகாதார தகவலை வழங்குவதில் முன்னணியில் இருக்கின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழில்நுணுக்கம் பற்றிய பயிற்சி களை அளிப்பதன் மூலமும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலமும் தொழில்சார் நோய்கள், காயங்களைக் குறைத்தல், வர்த்தக தொழிற்பாட்டாளர்களின் நியதிகளின்படி மேல் மட்ட தொழில்சார் சுகாதார நலன் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை ஏற்பாடு, தொழில்சார் நோய்கள் மற்றும் தொழில்சார் விபத்துகளைத் தடுத்தல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் பெறுபேறுகளின் தாக்கம், மாணவர்களுக்கு தேவையான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய ஏற்பாடுகள், தொழிற்றுறைக்கு சுற்றாடல்சார் கண்காணிப்பு சேவைகளை வழங்குதல் போன்றவற்றிற்கு பொறுப்பு வாய்ந்தது என்று பணிக்கப்படுகின்றது.

எமது நிறுவகத்தினால் அளிக்கப்படுகின்ற பயிற்சிகள், வேலைத் தலங்களில் ஏனையவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் தொழில் புரிகையில் வேலையாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும். தமது வேலைத்தலங்களில் இருக்கின்ற குறிப்பிட்ட தீங்குகளை இனங்காண்பதற்கு தனிப்பட்டவர்களையும் இயலச்செய்கின்றது.

நாம், எமது சேவைகளை வழங்குவதற்கு சிறந்த விஞ்ஞானம்சார் செய்முறைகளை, சிறந்த விஞ்ஞான அறிவினையும் வளங்களையும் மட்டுமே பயன்படுத்துகின்றோம். எமது சேவைகளை வழங்குவதற்கு அனுபவம்வாய்ந்த சிறந்த தகைமையுள்ள நிபுணர்களைப் பணிக்கமர்த்துவதன் மூலம் எமது சேவைகளின் சிறந்த தரத்தை நாம் பேணுகின்றோம். நாம், இலங்கையரின் எதிர்கால தொழிற் றுறையினை நோக்கி சிறந்த தரமான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை நாம் வழங்குகின்றோம்.

நாம்தான், உள் நாட்டு தொழிற்றுறை, தொழில்தருநர்கள், பணியாளர்கள், சர்வதேச தொழில் தாபனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உலக எண்ணக்கருத்துக்களுக்கமைவான தொழில்சார் சமூகத்துடன் பங்குடமையை ஏற்படுத்துவதில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரேயொரு அரசாங்க நிறுவகமாவோம். மேலும், நாம் தொழில்தருநாகள், பணியாளர்கள் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களுடனும் பணிபுரிவதுடன், அனைத்து முத்தரப்பு ஆக்கக்கூறுகளுடன் தொடர்பினைப் பேணுவதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

**டாக்டர்.என்.சி.என்.அமரதுங்க**

### தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நிருவாகக் கட்டமைப்பு

2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின்படி, மூன்றாம் தரப்புச் சபையை உள்ளடக்கிய பொதுச் சபைக் குழுவே தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் குழுவாகும். இப்பொதுச் சபைக் குழுவின் கட்டமைப்பானது 14 அமைச்சுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ளதோடு தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளரைத் தலைவராகவும் கொண்டுள்ளது.

**ஆளும் சபை உறுப்பினர்களின் வெட்டுமுகம்**



**தலைவர்**
திரு. கோத்தபாய ஜயரத்ன
தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

**சபை உறுப்பினர்கள்**



திருமதி. சாமினி அமரதுங்க
ஆணையாளர் அதிபதி
தொழில் திணைக்களம்



**டாக்டர். சம்பிக அமரசிங்க**
ஆணையாளர் அதிபதி
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்.

------------------------------

**திரு. ரோஹிதா பெர்னாண்டோ**
பிரதம தொழிற்சாலைகள் பொறியியலாளர்
தொழில் திணைக்களம்



**பேராசிரியர் அஜித் டீ அல்விஸ்**
இரசாயனச் செயன்முறைப் பொறியியற் பேராசிரியர்
மோரட்டுவப் பல்கலைக்கழகம்



**மருத்துவர் இனோகா சுரவீர**
சமூக மருத்துவ ஆலோசகர்
சுகாதார அமைச்சு



டாக்டர் டபிள்யூ.பி.விஜேரத்ன
எவ்.ஏ.ஓ



I
பணிப்பாளர்
நிதி அமைச்சு

திரு.எச்.என்.பீ.ஹேட்டிகந்தக

திரு.டபிள்யு.டீ.எம்.ஜி.பி.திஸ்ஸநாயக

திரு.ஏ.டீ.வீ.குமார வீரசிங்க

திரு.எச்.ஐ.ரூபசிங்க

திரு.டீ.டீ.எஸ்.கே.திஸ்ஸநாயக

திரு.பீ.பி.மல்லவராச்சி

# நிருவகக் கட்டமைப்பு



## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்பாடுகளும்

**பயிற்சி**

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமாக் கற்கைநெறி
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமாக் கற்கைநெறி
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி.
- பெருந்தோட்டத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ் பயிற்சி
- இயந்திரங்களுக்குக் கரியிடும் தொழிலாளர்களுக்கான பயிற்சி
- கைத்தொழில்கள் தொடர்பான தொழிற் கற்கைகள் நிகழ்ச்சித்திட்டம்
- கைத்தொழில் துறையில் தாதியர்களைப் பயிற்றுவித்தல்
- மருத்துவமனைப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- அலுவலகப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- ஆய்வுகூடங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- இரசாயனங்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல்
- உணவு நுகர்வோருக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- மனவழுத்த முகாமைத்துவ பயிற்சி நிகழிச்சித்திட்டம்

**சூழலியல் கண்காணிப்பு சேவைகள்**

- உள்ளகக் காற்றின் தரத்தைக் கண்காணித்தல்
- புகை வெளியீட்டினைப் பரிசோதித்தல்
- தொழிற்சாலையினுள் உள்ள தூசி மட்டத்தைச் சோதித்தலும்
- சத்த மட்டத்தினைப் பரிசோதித்தல்
- அதியுயர் வெப்ப மட்டத்தைப் பரிசோதித்தல்

**தொழில் புரிவதற்கான உடல் தகுதி**

- கேட்கின்ற ஆற்றல் பற்றிய சோதனை
- பார்க்கும் திறன் பற்றிய சோதனை
- இரசாயன தாக்கம் பற்றிய இரத்தப் பரிசோதனை
- நுரையீரல் தொழிற்பாடு பற்றிய சோதனை

**நிருவாகச் சேவைகள்**
**பாதுகாப்பு வாரச் செயற்பாடுகள்**
**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கொள்கை அபிவிருத்தி**

## 2015 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கற்கை நெறிகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் செயலமர்வுகள்

- **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமாக் கற்கைநெறி (1 வருடம்)**

இவ் வருடமும் தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான இரண்டு டிப்புளோமாக் கற்கை நெறிகள் நடாத்தப்பட்டன. 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் செப்ரெம்பர் மாதக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மேற்குறித்த கற்கை நெறிகளுக்கான தகைமைகளுக்கு அமைவாக வெவ்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 36 மற்றும் 32 நிறைவேற்று அலுவலர்கள் இக்கற்கைநெறிகளில் கலந்துகொண்டனர். செப்ரெம்பர் மாதக் கற்கைநெறியில் கலந்துகொண்டவர்களில் அதிகமானவர்கள் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த நிறைவேற்று அலுவலர்களாக காணப்பட்டமை முக்கிய அம்சமாகக் காணப்பட்டது. இக் கற்கைநெறியில் கோட்பாட்டுரீதியான அறிவு மட்டுமன்றி நடைமுறைரீதியான அறிவும் வழங்கப்படுவ தோடு கற்கைநெறியில் பங்கேற்கும் மாணவர்ககளால் சுற்றுலாக்களும் ஒழுங்குசெய்யப்படுகிறது.

இவர்கள் கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளதுடன், அடுத்த அணியும் அடுத்தவருட முடிவில் நிறைவுசெய்துவிடுவார்கள். ஆகவே இக் கற்கைநெறிகளைத் தொடர்வதன் மூலமாக அவர்கள் தமது வேலைத்தளங்களை மிகப் பாகாப்பாக உருவாக்கிக்கொள்ளக்கூடியவர்களாக இருப்பர் என்பது மட்டுமல்லாது இது தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு இன்றியமையாததுமாகும்.

தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்கள் தமது பெறுமதிமிக்க சேவையினை வழங்குவதால் எமது நிறுவனத்தினால் ஒரு தொகுதி தனிப்பட்ட பயிற்சியினை வழங்கக்கூடியதாக இருக்கிறது. இது ஒருபுறமிருக்க, இப் பயிற்சிநெறி ஒரு மேலதிகத் தகைமையாகவிருப்பதனால் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளைத் தேடுவோர் இதனால் பெருமளவில் நன்மை அடைகின்றனர். தற்போது பல மாணவர்கள் இக் கற்கைநெறியை நிறைவுசெய்து வெளிநாடுகளில் பணிபுரிகின்றார்கள்.




## தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி

2013 ஆம் ஆண்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான இரண்டு கற்கை நெறிகள் நடாத்தப்பட்டன. ஒவ்வொரு கற்கைநெறியும் 15 வார கால அளவினைக் கொண்டது. ஒரு கற்கைநெறியில் 17 மாணவர்களும் மற்றையதில் 25 மாணவர்களும் கலந்துகொண்டனர். இம் மாணவர்கள் அனைவரும் கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்தார்கள். இவ்வாறு வெற்றிகரமாக நிறைவுசெய்த மாணவர்களுடைய வேலைத்தளங்களில் தொழில்சார் விபத்துகள் கணிசமாளனவில் குறைவடைந்தன. இவர்களில் அதிகமானோர் பாதுகாப்பு அலுவலர்களாகக் கடமையாற்றுகிறார்கள். க.பொ.த. உயர்தர தகைமைகளுடன் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் ஆர்வமுள்ள எவரும் இக் கற்கைநெறியைத் தொடரலாம்.

.






## கைத்தொழில் துறையிலுள்ள தாதியர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி

நாட்டிலுள்ள உழைக்கும் வர்க்கத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது மக்கள் மத்தியில் பிரபலமடைந்து வருகின்றறது. ஆகவே நோயாளர்களுடன் தொடர்ச்சியாக உறவைப் பேணி சுகாதாரத் துறையில் முக்கிய பங்குவகிக்கும் கைத்தொழில் துறையைச் சேர்ந்த தொழில்முறைத் தாதியர்களுக்கும் அதேபோல தயாரிப்பு, ஆடைக் கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டத்துறையில் பணிபுரிபவர்களுக்குமான கற்கைநெறிகளைத் தொடங்குவதற்கு எமது நிறுவகம் தீர்மானித்துள்ளது. இக்கற்கைநெறியினை முதல் அணி கடந்த ஆண்டு வெற்றிகரமாக நிறைவுசெய்ததோடு இரண்டாவது அணிக்கு 2013 ஆம் ஆண்டில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 2013.4.03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இக் கற்கைநெறியில் 07 தாதியர் கலந்துகொண்டனர். 05 மாதங்கள் நீடித்த இந்த கற்கைநெறியினை மாணவர்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்தனர்.

**அலுவலகப் பதவியினருக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்**

இது ஒரு நாள் பயிற்சியாகும்.இதில் அதிக எண்ணிக்கையானோர் பங்குபற்றியிருந்தனர். இந்தப் பயிற்சியின் பிரதான கவனம் அலுவலக வேலைச் சூழலில் முக்கிய பிரச்சனைகளாக இருக்கின்ற இயலுமை மற்றும் தொழில்சார் மன அழுத்தம் என்பவற்றில் இருந்திருந்தது.

- **இரசாயனத்தைக் பாதுகாப்பாக கையாளுதல்**

நிறுவககத்தின்இந்த பயிற்சியானது பல்வேறு தொழிற்றுறைகளில் இரசாயனத்தைக் கையாள்வேரக்காக நடத்தப்பட்டிருந்ததுடன், 45 பேர் இதில் பங்குபற்றியிருந்தனர். இது ஒரு நாள் பயிற்சியாகும். நடத்தை அடிப்படையிலான பாதுகாப்பு உள்ளடங்கலாக பாதுகாப்பாக இரசாயனத்தைக் கையாளுகின்ற செய்முறையில் பிரதான கவனத்தைச் செலுத்தியிருந்தது. பங்குபற்றியோரின் பயிற்சி பற்றிய மதிப்பீட்டின்படி, தொழில்சார் ஊறுகளைக் குறைப்பதற்கு மிகவும்பயனுள்ள பயிற்சி என்பதாக இரந்தது.

- **உணவினைக் கையாள்வோருக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவககத்தின் கேட்பொர் கூடத்தில் பயிற்சி நடத்தப்பட்டிரந்ததுடன், இதில் 115 பேர் பங்குபற்றியிருந்தனர். ஹோட்டல் துறையில் உணவினைக் கையாளபவர்களுக்கு இது மிகவும் உற்சாகமளித்திருந்தது.சான்றிதழ் HACCP முறைமையில் உணவினைக் கையாள்வோரின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

**பயிற்சிப் பட்டறைகள்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், முதலாவது ‘‘சிறந்த தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சூாகதாரத்திற்கான விருதினை’’ 2014 ஆம் ஆண்டில் ஆரம்பித்ததோடு அதன் மூலமாக வெவ்வேறு தொழிற்றுறைகளில் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாகக் கைக்கொள்ளப்படும் நடவடிக்கைகளை இனங்கண்டுகொண்டது. இதற்கமைய, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், பொறுப்புவாய்ந்த அரச நிறுவனமொன்றாக வெவ்வேறு தொழிற்றுறைகளில் கைக்கொள்ளப்படும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான செயற்பாடுகளைத் தரப்படுத்துதலைத் ஆரம்பித்து வைத்ததுடன், 50 இற்கும் மேற்பட்ட மனிதவள முகாமையாளர்களின் பங்குபற்றலுடன் **“சிறந்த செய்முறைப பயிற்சிப் பட்டறை ”** என்பதனையும் ஒழுங்கமைத்தது

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்திற்கான ஆயத்தச் செயற்பாடுகள்**

அமைச்சரவையானது ஒக்ரோபர் மாதத்தின் இரண்டாவது வாரத்தினைத் ''தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்'' என்று பிரகடனப்படுத்தியிருப்பதால் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், ஒக்ரோபர் மாதத்தின் 2 ஆவது வாரத்தில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தினை ஆண்டு தோறும் ஒழுங்குசெய்கின்றது. இந்த வாரத்தினை நினைவுகூரும் முகமாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் தனது பங்குதாரருடன் இணைந்து தொடர் நிகழ்வுகளை நடாத்துகின்றது.





***தொனிப்பொருள்: தொழில்சார் பாதுகாப் மற்றும் சுகாதார கலாசாரத்தை வேலைத்தளங்களில் காலூன்றச்செய்தல்***



*அனுமதிச் சீட்டு*




**வாரத்தின் தொடக்கம்**

**மஜெஸ்ரிக் சிற்றி முகப்புக்கூடத்தில் தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு – 10 ஒக். 2015**

மிகவும் எளிமையானதொரு முறையில் பொது மக்களுக்கு உரையாற்றவும் தொழில்சார் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை வழங்குவதற்கும் சிறந்தவொரு இடமாக மஜெஸ்ரிக் சிற்றி முகப்புக்கூடம் தேர்ந்தெடுக்கப்பட்டு விழிப்புணர்வு நிகழ்வானது 2015.10.10 ஆம் திகதி மு.ப. 10 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை நடைபெற்றது. 09 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர், யுவதிகள், வேலை செய்யும் பெண்கள், ஆண்கள் மற்றும் முதியோர் ஆகிய சகல தரப்பினரையும் கவரும் வண்ணம் சில செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

**சிறுவர் செயற்பாடுகள்** - வீடுசார் பாதுகாப்புப் பிரச்சனைகளை விளக்கும் வகையில் ஓவியப் போட்டியொன்று இடம்பெற்றதோடு சிறு சிறு அடையாளச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

**மாணவர், இளைஞர் யுவதிகளுக்கான செயற்பாடுகள்** - எம்மால் உருவாக்கப்பட்ட வினாக் கொத்துகளிலிருந்து சில கேள்விகள் கேட்கப்பட்டன. வீடு, வீதிப் பாதுகாப்புடன் தொடர்பான பாதுகாப்பற்ற நிலைமைகளை அடையாளம்காட்டி அவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான வழிகளைப் பரிந்துரைக்குமாறு அவர்களிடம் வேண்டப்பட்டது. பாதுகாப்புப் பிரச்சனை தொடர்பான செயற்பாடுகளோடு ஒருசில பொழுதுபோக்கு அம்சங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.

**முதியோருடன் தொழில் புரிதல்**

பாதுகாப்பற்ற நிலைமைகள், தொழில்சார் நடவடிக்கைகள் தொடர்பில் எமது அணி பல செயற்பாடுகளை வடிவமைத்திருந்தது. அவற்றுள் சில, மடிக்கணனி மற்றும் ஐ பாட்களில் (i- pad) நிறுவப்பட்டுள்ள எளிய மென்பொருளை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டவை. அன்றைய நாள் ஊடாட்டம் மிக்கதாகவும் சுவாரஸ்யமானதாகவும் இருந்தது என்பது பார்வையாளர்களது கருத்தாக அமைந்ததோடு அந்நிகழ்வு தம்மை விழிப்படையச் செய்ததாகவும் கூறியிருந்தனர்.

**ஊடக மாநாடும் தொழில்ரீதியாக அங்கவீனமுற்றவர்களைச் சமூகமயப்படுத்துதலும் - 11 ஒக்டோபர்,2015**

கௌரவ அமைச்சரின் ‘‘பாதுகாப்பு வார’’ செய்தியை நாட்டுக்குத் தெரிவிக்கும் பொருட்டு ஊடக மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அதில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் திரு. டபிள்யூ.டீ.ஜெ. செனவிரத்ன அவர்கள் சமூகத்தில் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் மேம்படுத்துவதற்குத் தாமும் தமது அமைச்சும் கொண்டுள்ள ஈடுபாட்டினை வெளிப்படுத்தியிருந்தார்.

**தொழில்ரீதியாக அங்கவீனமுற்றவர்களைச் சமூகமயப்படுத்துதல் - 12 ஒக்டோபர்,2015**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தனது சேவைகளைப் பரந்தளவில் விரிவாக்கிக்கொள்ள விரும்பியது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், 2015 ஆம் ஆண்டில் வேலையின்போது அங்கவீனமுற்ற 08 தொழிலாளர்களை தொழிலாளர் நட்டஈட்டுத் திணைக் களத்தினூடாக இனங்கண்டது. அங்கவீனம் காரணமாக அவர்களுடைய சமூகநிலை தாழ்வாகக் காணப்பட்டதோடு, உழைப்பாற்றலும் மிகக் குறைந்துவிட்டது. ஆகவே தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் வேறு விதமாகச் சிந்தித்தது. அவர்களைத் தொழில்வாய்ப்புகளுக்காக ஒன்றிணைப்பதன்மூலம் அவர்களது குடும்பங்களுக்குப் பலம் சேர்க்க விரும்பியது.

இத் தொழிலாளர்களுக்குச் செயற்கை உறுப்புகளை வழங்குவதன் மூலமாக அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதே அவர்களின் உத்திகளின் முதற்படியாக அமைந்திருந்தது. இதற்காக, நாட்டிலுள்ள அனுமதிபெற்ற ‘உள்ளூர் செயற்கை உறுப்புத் தயாரிப்பாளர்களை’ தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் இனங்கண்டுகொள்ள முடிந்தது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், அங்கவீனமுற்ற 07 தொழிலாளர்களையும் இணைத்ததோடு செயற்கை உறுப்புத் தயாரிப்பாளர்கள் மூன்று வாரங்களுக்கள் அவர்களுக்கான செயற்கை உறுப்புகளை அவர்களின் உயரம், உடற்கட்டமைப்பிற் கேற்ப அளவெடுத்துத் தயாரித்தனர். பின்னர் அவர்கள் 06 வாரங்கள் புனர்வாழ்வளிக் கப்பட்டு அமைச்சர் திரு டபிள்யூ.டீ.ஜெ. செனவிரத்ன அவர்களினால் ‘‘உறுப்பளிக்கும் விழா’’ நடாத்தப்பட்டது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், இத் தொழிலாளர்கள் தொடர்பில் கூர்ந்து கண்காணித்து வந்ததது. அத்துடன், தொழிலாளர்களில் இருவர் அவர்களது முன்னைய வேலைத் தளங்களில் ஈடுபடுத்தப்படக்கூடியவர்களாக இருந்தனர். அவ்வாறு ஈடுபடுத்தப்பட்டவர்கள் ‘‘எங்களுக்கு இப்போது வேலை கிடைத்துவிட்டது’’ என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.



**பாதுகாப்பு வாரத்தில் பல்கலைக்கழகங்களுடன் கூட்டிணைவு**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனிதவள முகாமைத்துவத் துறையுடன் இணைந்து 2015.10.13 ஆம் திகதி பயிற்சி அமர்வு ஒன்றினை நடாத்தியிருந்தார்கள்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் இயந்திரப் பொறியியற்றுறையுடன் இணைந்து நடாத்திய முழு நாள் செயலமர்வினை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பாராட்டியதுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தரத்தினை மேம்படுத்துவதற்கும் நாட்டில் பாதுகாப்புக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் தனது முழுமையான அர்ப்பணிப்பையும் வழங்கியிருந்தார்.





**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு – 2015**

இந் நிகழ்வானது தொழிற்றுறையிலுள்ள மனிதவள முகாமையாளர்கள், உயர் மட்டங்களுக்கு உரையாற்றும் நோக்கில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட எமது வருடாந்த நிகழ்வுகளில் ஒன்றாக அமைந்தது. 450 இற்கும் மேற்பட்டவர்கள் இம் மாநாட்டில் கலந்துகொண்டிருந்ததுடன், இந்த பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை வருடந்தோறும் அதிகரித்துச் செல்வது உற்சாகமளிப்பதாகவுள்ளது. இது பாதுகாப்புக் கலாச்சாரத்தின்மீது தொழிற்றுறைகள் காட்டும் ஈடுபாட்டினைக் காட்டுகிறது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் புதிதாக எழும் அல்லது மீளெழும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எப்போதும் முயற்சிக்கின்றது. உலகளாவிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சனைகள் தொடர்பில் புதிய கருத்துகளுக்கும் சிந்தனைகளுக்கும் தீர்வுகாணும் முகமாக எமது கைத்தொழிற் சமூகத்திடையே தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான அறிவைப் பகிர்ந்துகொள்வதற்கு மலேசியா, சிங்கப்பூர், கொறியா முதலான நாடுகளிலிருந்து சிறந்த பேச்சாளர்களைக் கொண்டுவருவதற்கு இயலுமாகவிருந்தது.







**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வருடாந்தப் பட்டமளிப்பு விழா**

எமது டீப்புளோமா கற்கைநெறியினை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் மற்றுமோர் வருடாந்த நிகழ்வாகக் காணப்படுகிறது. எழுபதிற்கும் மேற்பட்ட டிப்புளோமா, சான்றிதழ் கற்கைநெறிகளை நிறைவு செய்தவர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சி மிகவும் வண்ணமயமாக ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது.



**கைத்தொழிற்றுறையில் புலம்பெயர் யப்பானியப் பயிலுநர்களிடையே தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயலளவினைக் கட்டியெழுப்பதல்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, புலம்பெயர் யப்பானியப் பயிலுநர்களுக்கு யப்பான் நாட்டு நுழை அனுமதிப்பத்திரத்தின் முதற்கட்டத் தேவையாகத் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான இயலளவினைக் கட்டியெழுப்பும் பயிற்சியினை வழங்கும் புது முயற்சியினை ஆரம்பித்துள்ளது.

**இந்தப் பயிற்சி அலகானது மூன்று பகுதிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன,**

இனங்காணப்பட்ட தொழிற்றுறைக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

யப்பான் மொழிப் பயிற்சி

வேலை செய்வதற்கான உடல் தகுதி

வெளிநாடு ஒன்றிற்குப் புலம்பெயர எதிர்பார்த்திருக்கும் தொழிலாளர்களிடையே தொழில்சார் விபத்துகள், நோய்களைக் குறைத்துக்கொள்வதற்கான புதிய உத்தியொன்றை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

.



**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஆய்வுகள்**

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஆய்வினைத் தமது பல்கலைக்கழக ஆய்வின் பகுதியாக மேற்கொள்ளும்படி கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட மாணவர்கள் மூவரை இணைத்திருந்தோம். ஆய்வின் தலைப்புகளாவன:

1.இலங்கையில் உற்பத்தி மற்றும் கட்டுமானக் கைத்தொழில் தொழிலாளர்களின் வேலையின் போதான காயங்களை அறிக்கையிடாமைக்கான காரணங்களை மதிப்பிடல்.

2.புற்றுநோய் மருத்துவமனை ஊழியர்களின் வேலைப் பொருத்தப்பாட்டை ஆராய்தல்.

3.கொழும்பு மார்புச் சிகிச்சை நிலையத்திற்கு வருகைதரும் நோயாளிகளின் வேலைப் பொருத்தப் பாட்டை ஆராய்தல்.

இந்த ஆராய்ச்சிகளின் காண்பிப்புகளை எமது இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்யமுடியும்.

**தொழிற்றுறைகளுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவ முறைமை தொடர்பான ஆலோசனைச் சேவைகள்**

இடர் மதிப்பீடு ஒன்றினை நடாத்தியதன் பின்னர் குறித்த தொழிற்றுறைகளில் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை உருவாக்கும்முகமாக பாதுகாப்பு மற்றும் சுகாதார முறைமையினை வகுத்து தேவைப்படும் நிறுவனங்களிடையே வெளியிட்டது.

**முறையான உபகரணப் பயன்பாடு தொடர்பில் தேவையான சேவைகளை வழங்குதல்.**

தொழில் விவரக் குறிப்புகளுக்கு அமைவாகத் தனியாள் பாதுகாப்பு உபகரணங்களின் முறையான பயன்பாட்டை விளக்குவதற்குத் தேவையான போலிகளை வடிவமைத்து இத் தனியாள் பாதுகாப்பு உபகரணங்களின் முறையான பயன்பாடு தொடர்பான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் நடாத்தப்பட்டன.







**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வேலைக் கிரமம்**

தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது சகல வேலைத்தளங்களிலுமுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும், சுகாதாரத்தை உயர்த்தும் நோக்கில் தனது வேலைக் கிரமத்தை அமைத்துக்கொள்கிறது. இந்த இலக்கினை எட்டுவதற்கு பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றது.

***சூழலியற் கண்காணிப்பு*** - தொழிற்றுறையில் வேலைசெய்யும் சூழலின் தரத்தை உறுதிசெய்து கொள்ள வெப்பநிலை, ஒளி, சத்தம், கிருமித் தொற்றுள்ள வாயுக்கள் மற்றும் உள்ளக வளியின் தரம் முதலான வேலைத்தளச் சூழல்சார் ஆபத்துகளை அளவிடும் பொறுப்பை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் எடுத்துக்கொள்கின்றது. இது 2015 ஆம் ஆண்டில் 150 இற்கும் மேற்பட்ட வேலைத்தள சூழலியற் கண்காணிப்புச் சேவைகளை வழங்கியுள்ளது.

***உயிரியற் கண்காணிப்பு*** – தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழிற்றுறையின் தேவைகளில் ஒன்றான வேலை செய்வதற்கான உடற்றகுதி மதிப்பீட்டுச் சேவையினை மேற்கொண்டுவருகிறது. அதற்கமைய தொழிலாளர்களில் வெளிப்படும் நோய் அறிகுறிகளுக்கு அமைவாக உடற் பரிசோதனை, உடல் நிறைச் சுட்டிக் கணிப்பு, குருதி அமுக்கம் மற்றும் நாடித்துடிப்பு விகிதப் பரிசோதனைகள், கட்புலப் பரிசோதனை, தொடர்ச்சியான இரத்தப் பரிசோதனை செவிப்புலப் பரிசோதனை நுரையீரல் தொழிற்பாடு குறித்த பரிசோதனை முதலான பரிசோதனைகளை நடாத்துகின்றது.

***இடர் மதிப்பீடும் சோதனை நடவடிக்கைகளும்*** - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இடர் மதிப்பீடு மற்றும் தொழிற்றுறைசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சோதனை நடவடிக்கைகளை நடாத்துவதுடன், தொழிலகத்தில் காணப்படும் தொழில்சார் ஆபத்துகளைச் சுட்டிக்காட்டி அவற்றைக் குறைப்பதற்கான பரிந்துரைகளையும் வழங்குகின்றது. அதுமட்டுமல்லாமல் இடர் மதிப்பீடு மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஒழுங்கினைப் பேணுவதற்கான புதிய மென்பொருள் தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது.

**நிறுவனத்தின் திடநிலையும் அதன் வளர்ச்சியும்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது தொழிற்றுறைக்கான முதன்மைச் சேவை வழங்குநராகத் தனது பெயரை நிலைநாட்டியுள்ளது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2015 ஆம் ஆண்டில் தனது முன்னேற்றத்துக்கான முதல் அடியை எடுத்துவைக்க விரும்பி “உற்பத்தித்திறன் விருதுகள் 2015” விருதுக்கு விண்ணப்பித்தது. அதற்காக உற்பத்தித்திறன் கருத்திட்ட முன்மொழிவொன்றையும் விசேட இலட்சினை ஒன்றையும் உருவாக்கி உற்பத்தித்திறன் விருதுகள் சாதனை உத்தியை அடைவதற்கான விரைவானதொரு கருத்திட்டத்தை ஆரம்பித்திருந்தது.

**உற்பத்தித்திறன் விருதுகள் - 2015 இற்கான தயார்ப்படுத்தல்கள்**

தொழிற்றுறை எதிர்பார்க்கும் சிறந்தவொரு சேவையை வழங்குவதற்கே NIOSH எப்பொழுதும் எதிர்பார்க்கிறது. அவ்வாறு வழங்குவதற்கு அது தனது உள்ளார்ந்த இயலளவினை இற்றைப்படுத்திக்கொள்ளவும் தரமுயர்த்திக்கொள்ளவும் வேண்டியுள்ளது. ஆகவே அது தனது நிறுவனரீதியான வெளித் தோற்றத்தைத் தரமுயர்த்திக்கொள்ளவேண்டி கீழ்க்காணும் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

- நாம் நமது நிறுவனத்திற்கு 5S எண்ணக்கருவை அறிமுகப்படுத்தினோம்.

தொடர்புள்ளவை எவையேனும்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தனது சேவைகளை மேலும் வினைத்திறனுடன் வழங்குவதற்கு இயலுமாகவிருந்த தனது தொடர்பாடல் உத்திகளை மாற்றிக்கொண்டது.




தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின், இணையதளம் உருவாக்கப்பட்டு தொழிற்றுறைச் சமூகத்துடன் மேலும் வினைத்திறனுடன் தொடர்பாடக்கூடியவாறு இருந்தது.



**2011 தொடக்கம் 2015 வரை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் சேவை வழங்கும் இடப் பரம்பல்**




சேவை வழங்கலானது 2011 இல் 33 தொழிற்றுறைகளை மட்டும் உள்ளடக்கி மேல்மாகாணத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது.




சேவை வழங்கலானது 2012 இல் 60 தொழிற்றுறைகளை மட்டும் உள்ளடக்கி மேல்மாகாணத்திற்கும் மத்திய மாகாணத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்டது.




2013 இல் மேல்,மத்திய,தென்,வடமேல்,வடக்கு மாகாணங்களில் 90 தொழிற்சாலைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன




2014 -2015 இற்கிடையில் 135 தொழிற்சாலைகளை உள்ளடக்கி எமது சேவைகளை விஸ்தரிக்க முடியும்

## தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கற்கை நூலகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தரைத் தளத்தில் அமைந்திருக்கும் நூலகமானது வார நாட்களில் மாணவர்களின் பாவனைக்காக பயன்தரு நூல்கள், பருவ இதழ்கள், துண்டுப் பிரசுரங்கள், செய்தி அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், நகல்கள், பாடவிதானங்கள், இரசாயனப் பாதுகாப்புத் தரவுக் குறிப்புகள் மற்றும் தரவுகள் குறித்த கட்டுரைகள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

- தொழில்சார் சுகாதாரம்
- தொழிற்றுறை
- சூழல் வேலைக்குகந்த சூழல்
- பொதுமக்கள்
- வேலைக்குகந்த சூழல்
- தொழில்னுட்பப் பாதுகாப்பு
- இரசாயனங்களிலிருந்து பாதுகாப்பு
- தொழில்சார் நோய்கள்
- கைத்தொழிற் சட்டங்களின் சட்டவாக்கம்
- நச்சுப்பொருளியில்
- தண்ணீர் மற்றும் துப்புரவு

## <u>நிதிப் பகுப்பாய்வு 2014 – 2015</u>

| | **2014** | **2015** |
|---|---|---|
| தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாநெறியிலிருந்து கிடைத்த வருமானம் | 5,309,172.86 | 8,407,400.00 |
| சூழலியல் நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த வருமானம் | 7,147,741.87 | 8,919,300.00 |
| பிற நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைகன் மூலம் வழங்கிய சேவைகளிலிருந்து கிடைத்த வருமானம் | 4,058,228.94 | 2,077,484.00 |
| மருத்துவப் பரிசோதனை நடவடிகளைகைகள் மூலம் கிடைத்த வருமானம் | 1,206,607.26 | 3,017,700.00 |
| கட்டட வாடகைமூலம் கிடைத்த வருமானம் | 28,625.00 | |
| (தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அபிவிருத்தி நிதி) வட்டி மூலம் கிடைத்த வருமானம் | 2,571,234.60 | 2,992,408.91 |
| ஏனைய வருமானங்கள | 61,574.00 | 61,022.00 |
| மொத்தம் | <u>20,383,184.00</u> | <u>25,475,314.91</u> |

## நிதிக் கூற்று

### தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**2015 திசெம்பர் 31 இலுள்ளவாறான ஐந்தொகை**

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| **<u>சொத்துகள்</u>** | | **ரூபா** | **ரூபா** |
| **அசையும் சொத்துகள்** | | | |
| பணமும் பணத்திற்குநிகரானவையும் | **குறிப்பு 1** | 753,803.60 | 3,042,876.75 |
| கிடைக்கக்கூடியன | **குறிப்பு 2** | 9,574,102.02 | 3,673,866.94 |
| அபிவிருத்தி நிதி | | 46.252.823.65 | 31.781.095.52 |
| | | 56.580.729.27 | 38,497,839.21 |
| **ஆசையாச் சொத்துகள்** | | | |
| திறைசேரிக் கணக்குகள் | | 267,500.00 | 267,500.00 |
| இயந்திரப் பொறிகள் உபகரணங்கள் | **குறிப்பு 3** | 21,890,542.61 | 17,610,593.52 |
| அமைச்சினால் செய்யப்பட்ட மூலதனச் செலவுகள் | | - | - |
| | | 22,158,042.61 | 17,878,093.52 |
| மொத்தச் சொத்துகள் | | 78,738,771.88 | 56,375,932.73 |
| | | | |
| **பொறுப்புகள்** | | | |
| **நடப்புப் பொறுப்புகள்** | | | |
| செலுத்தக்கூடியவை | **குறிப்பு 5** | 1,819,228.15 | 3,641,442.14 |
| மொத்தப் பொறுப்புகள் | | 1,819,228.15 | 3,641,442.14 |
| தேறிய சொத்துகள் | | 76,919,543.73 | 52,734,490.59 |
| | | | |
| **தேறிய சொத்துகள்** | | | |
| திரட்டிய மேலதிகம் | **குறிப்பு4** | 59,862,816.71 | 52,734,490.59 |
| திறைசேரி இலாபம் | **குறிப்பு6** | 15,406,726.97 | |
| மருத்துவ உபகரணங்கள் நன்கொடை – தேசிய விஞ்ஞான தாபனம் | | 1,650,000.00 | |
| | | 76,919,543.73 | 52,734,490.59 |

டபிள்யூ.ஜே.எல்.யூ. விஜயவீர
தலைவர்
தே.தொ.பா.சு.நி

பீ.எம்.கே. பெரேரா
உ.ப. நிதி
தே.தொ.பா.சு.நி

**நிதிச் செயலாற்றுகைக் குறிப்பு**

**தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்**

**2015 திசெம்பர் 31 இலுள்ளவாறான**

| வருவாய் | 2015 | 2014 |
|---|---|---|
| திறைசேரி மானியம் | - | 10,973,676.59 |
| தொழிற்பாட்டு வருமானம் | 29,523,539.91 | 20,383,184.53 |
| | 29,523,539.91 | 31,356,861.12 |
| Less: | | |
| செலவுகள் | | |
| நிர்வாகச் செலவுகள ; | 20,031,368.05 | 9,901,151.84 |
| நிதி அறவீடுகள | 45,192.03 | 19,690.00 |
| பெறுமானத்தேய்வு | 2,360,194.80 | 1,994,242.33 |
| மொத்தச் செலவுகள் | 22,436,754.88 | 11,915,084.17 |
| **வருடத்துக்கான மிகை** | **7,086,785.03** | **19,441,776.95** |

## நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

### 1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 1.1. நிறுவனத்தை அறிக்கையிடல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி தொழிற்சங்க உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின்கீழ் உருவாக்கப்பட்டது. எமது நிறுவனமானது முறையான சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன்மூலம் சகல மக்களுக்குமான சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இந்த நிறுவனம், இல. 97, ஜாவத்தை வீதி, கொழும்பு – 05 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

#### 1.2. முதன்மைச் செயற்பாடுகளும் நடவடிக்கைகளின் தன்மைகளும்

தே.தொ.பா.சு.நி, முறையான சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன்மூலம் சகல மக்களுக்குமான சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. இதன் செயற்பாடுகள் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளைப் பரப்புதல், அறிவுரை ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்குகிறது. இந்த நிறுவனம் தொழிலாளர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குவதோடு இந்த பயிற்சி களால் பயனடையக்கூடிய ஏனைய தரப்பு மக்களுக்கும் பயிற்சிகளை வழங்குகிறது. அத்தோடு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் ஆய்வுக் கற்கைகள், ஆராய்ச்சிகள் என்பவற்றுக்கும் தனது ஒத்துழைப்பை வழங்குகிறது.

#### 1.3. தயாரிப்படுத்தலுக்கான அடிப்படை

(அ) இணக்கக் கூற்று

நிறுவனத்தின் நிதிக்கூற்றானது ஐந்தொகை, வருமானக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கான குறிப்பு முதலானவற்றைக் கொண்டுள்ளது. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (“ICASL”) பரிந்துரைக்கப் பட்ட சிறு முயற்சியாளர்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கு (SLASSE) அமைவாக இக் கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன.

(ஆ) அளவீடுகளுக்கான அடிப்படை

நிதிக்கூற்றானது வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதிக்கூற்றின் பணவீக்கக் காரணிகளுக்காக எந்தவொரு சரிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நாணயம்

நிறுவனத்தின் தொழிற்படு நாணய அலகான இலங்கை ரூபாவிலேயே நிதிக்கூற்றானது சமர்ப்பிக்கப்படுகின்றது.

## (2) சொத்து, பொறி, உபகரணம்

### i. இனங்காணலும் அளவீடும்

சொத்து, பொறி மற்றும் உபகரணம் என்பன செலவற்ற திரள் பெறுமானத்தேய்வு மற்றும் திரள் பழுது இழப்புகள் என்பனவற்றில் அளவிடப்படுகின்றன.

ஒரு இயந்திரப்பொறி அல்லது உபகரணத்தின் செலவு என்பது அதனது கொள்வனவு விலை மற்றும் அதன் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக்கேற்ற செயல்படுதன்மைக்குக் கொண்டுவர ஆகும் நேரடிச் செலவு என்பவற்றை உள்ளடக்குகிறது.

ஒரு சொத்து, பொறி மற்றும் உபகரண வகையின் பாகத்தினை மாற்றுவதற்குண்டான தனியாகக் கணக்கு வைக்கப்படும் செலவானது அகற்றப்படும் பாகத்தினைக் காவிச்செல்லும் கூலியுடன் இணைத்து மூலதனச்செலவுவைக்கப்பட்டது.

இதனாலுண்டான பிற செலவுகள் சொத்து, பொறி மற்றும் உபகரண வகையில் அடங்கும் எதிர்காலப் பொருளியல் நன்மைகளை அதிகரிக்கும்பட்சத்திலேயே மூலதனச்செலவில் வைக்கப்படுகின்றன.

### ii. பெறுமானத்தேய்வு

சொத்தின் கணிக்கப்பட்ட பாவனைக் காலம் மீதான ஓர் நேர்கோட்டு அடிப்படையிலான வருமானக் கூற்றில் பெறுமானத்தேய்வு இனங்காணப்படுகிறது. கணிக்கப்பட்ட பாவனைக்காலம்

| சொத்து | ஆண்டு |
|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 10 |
| கணனி உபகரணங்கள் | 5 |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 10 |
| ஒலி அமைப்புச் சாதனங்கள் | 5 |
| மருத்துவ உபகரணங்கள் | 10 |
| ஏனைய சொத்துகள் | 10 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No.: எல்ஈடபிள்யூ/ஏ/என்ஐஓஎஸ்எச்/ எப்ஏ/2015
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2016 ஒக்டோபர் 18

தலைவர்,
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம்

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் 17(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை நிறுவகத்தின் தலைவருக்கு 2016 மே 26 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

2

3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**நிதிக்கூற்றுக்கள்**

---

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

---

கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதி வழங்கப்பட்டவைகள் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்ய முடியாதிருந்த போதிலும் யப்பான் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக எதிர்வரும் வருடத்திற்காகக் கிடைத்த ரூபா 166,000 தொகை பெறவேண்டிய கணக்குகளின் மீதியில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாடநெறி வருமானங்களை இனங்காணும் போது நிறுவகத்தால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டில் டிப்ளோமா பாடநெறி வருமானத்தில் முன்னைய ஆண்டிற்காகவும் எதிர்வரும் வருடத்திற்காகவும்

கிடைத்த ரூபா 2,000,000 தொகையான பாடநெறிக் கட்டணம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க மானியக் கணக்கு வைப்பு தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டு வரை தொழிலாளர் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் ஊடாக நிறுவகத்திற்குக் கிடைத்த மீண்டெழும் மற்றும் மூலதன மானியம் அனைத்தும் நடைமுறை வருமானமாகக் கருதி மீளாய்வாண்டின் போது அது நிதி நிலைமை கூற்றில் உரித்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்காக அமைச்சு மீளளிப்புச் செய்த மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள் முறையே ரூபா 610,677 உம் ரூபா 4,913,270 உம் மற்றும் மீளாய்வாண்டிற்காக மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களில் முறையே ரூபா 3,421,259 தொகையும் ரூபா 585,885 தொகையும் உரிய பிரகாரம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது பல்வேறு நிறுவனங்களில் இருந்து கிடைத்து அமைச்சுக்கு அனுப்பப்பட்ட ரூபா 267,500 தொகை பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அது நிறுவகத்தின் கணக்குகளில் வைப்பாக கணக்கீடு செய்யப்பட்ட போதும் அது பொதுத் திறைசேரியின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

2014 சனவரி முதல் 2015 திசெம்பர் வரை விதவைகள், அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பான ரூபா 143,151 தொகை மற்றும் தொழில் திணைக்களத்திற்கு மீளளிப்பு செய்யப்பட வேண்டிய ரூபா 1,170,961 தொகை என்பன கணக்காய்வுத் திகதியான 2016 மே 04 ஆந் திகதி வரையிலும் உரிய நிறுவனத்திற்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

4 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் முன்னைய ஆண்டின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2016 மே 04 ஆந் திகதி வரையும் 2015 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**நிதி மீளாய்வு**

---

1 **நிதி விளைவுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 7,086,785 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,441,777 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,354,992 வீழ்ச்சியொன்றைக் காண்பித்திருந்தது. திறைசேரி மீண்டெழும் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது முன்னைய ஆண்டில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை மாற்றப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 15,406,726 கூட்டுத்தொகையான மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாக இனங்காணப்படாமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும், நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்துவரும் மிகையொன்று காணப்பட்டது. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அரசாங்க மானியக் கணக்கு வைப்பு ஒரேசீராக இல்லாமையின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டின் நிதி விளைவில் வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம், ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரச வரிகள் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 4,767,579 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டு வரை சீராக அதிகரித்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 27,381,220 தொகையான பங்களிப்பு 2015 ஆம் ஆண்டின் போது 42 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தமை

6

**செயற்பாட்டு மீளாய்வு**

---

1 **செயலாற்றல்**

---

2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய கொள்கையொன்றைத் தயாரிக்கும் சகல செயற்பாடுகளின் போதும் உரிய அமைச்சருக்கு உதவியாக இருத்தல், தேவையான கற்கை ஆராய்ச்சிகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு நிலை, சுகாதார மற்றும் நலன்புரி தொடர்பான கல்வி, பயிற்சியளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டுதல் போன்ற சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுல்படுத்துதல் நிறுவகத்தின் பிரதான நோக்கங்களாகும்.

மீளாய்வாண்டின்போது நிறுவகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் மற்றும் அவற்றை நிறைவேற்றுதலின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 03 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கூறப்பட்ட நிறுவகத்தின் நோக்கங்களுக்கிடையே அனேகமானவற்றின் நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2 **செயற்பாட்டு நடவடிக்கைகள்**

---

நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 2 டிப்ளோமா பாடநெறிகளும், 03 சான்றிதழ் பத்திர பாடநெறிகளும் நடாத்தப்பட்டு சான்றிதழ் பத்திரம் கையளிக்கப்பட்டிருந்த போதும், அந்த பாடநெறிகளுக்கு விண்ணப்பித்த மற்றும் வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழ் பத்திரங்களை உரித்தாக்கிக் கொண்ட மாணவர்கள் தொடர்பான தரவு முறைமையொன்று பேணப்படாமையினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் பத்திரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் போது நிறுவகம் ஏதாவது ஒழுங்குமுறையற்ற நிலைக்கு இடமளித்திருந்தமையும் அதன் மூலம் மோசடிகள் ஏற்படுவதற்கு அவகாசம் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

### 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 10 வருட காலம் முதல் கூட்டுமொத்தமாக ரூபா 5,644,437 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் கட்டிடத்தின் உரித்தைக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டு இலக்கிடப்பட்ட வருமான அதிகரிப்பிற்கு பாடநெறிக் கட்டண அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்ததுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட சுற்றாடல் அளவிடைகள் தொடர்பான பரீட்சிப்பிற்கான வளப் பங்களிப்பை வழங்குவதற்காக தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் பொது நிர்வாகம், முகாமைத்துவ அமைச்சின் அங்கீகாரமின்றி ரூபா 166,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலையில் 06 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 14 உத்தியோகத்தர்களுக்காக வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமையினால் நிறுவகத்தின் நோக்கங்களை உரிய பிரகாரம் நிறைவேற்றுவதில் கஷ்டங்கள் ஏற்பட்டிருந்தது. இந்த வெற்றிடங்கள் தொடர்பாக முன்னைய ஆண்டுகளிலும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 உபபிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(உ) இன் பிரகாரம் அது ஆறு மாத காலத்தை விஞ்சாத காலத்தினுள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 மற்றும் 3.6 ஆம் பிரிவுகளின் திருத்தங்களுக்குரிய 2014 யூலை 04 ஆந் திகதிய மேலதிகம் 28 இன் பிரகாரம் விலை ஒப்பீட்டு முறையின் கீழ் ஆகக் குறைந்தது மூன்று கூறுவிலைகள் பெற்று கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 214,000 ஆன பிளாஸ்டிக் கதிரைகள் மற்றும் மேசைகளைக் கொள்வனவு செய்யும் போது அதற்கு முரணானதாக ஒரு கூறுவிலையினை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 5.3 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக போதியளவான உபாய வழிகள் பயன்படுத்தப்படாமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமை |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) நிலையான சொத்துக்களின் நிர்வாகம் | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை |

ஒப்பம்: எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி